2023 ஏப்ரல் 21] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே அதிகமாக தேங்காய் உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு அந்த மட்டையிலிருந்து ரூ.1.50, ரூ.2.00 கிடைக்கும். சுற்றுச்சூழலின் காரணமாக இந்தத் தொழில் முடங்குவதால், ஏறத்தாழ ரூ.1,000 கோடி நஷ்டம் ஏற்படுவதால், அரசு உடனடியாக அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(அஇ) நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசியினால் ஏற்படும் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். அவருக்கு மைக் கொடுங்கள்.*

முற்பகல் 10–25

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் நியாய விலைக் கடைகளில் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படும் என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து, அது நடைமுறைக்கு வந்திருக்கின்றது. இந்தியாவிலே 60 விழுக்காடு மக்களுக்கு ஊட்டச்சத்து குறைவாக இருப்பதால், அரிசியில் இரும்புச் சத்தை சேர்க்கக்கூடிய வகையில், செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படுகிறது. ஆனாலும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறைபாடு இருப்பதால், இரும்புச் சத்தை அதிகரிப்பதன் காரணமாக நீரிழிவு நோய், கணைய நோய். . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைப் பார்த்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள். (குறுக்கீடு) புரிந்து கொண்டுவிட்டார்கள். (குறுக்கீடு) புரிந்துகொண்டுவிட்டார்கள். (குறுக்கீடு) அதில் பிரச்சினை இருக்கிறது என்று சொல்லிவிட்டீர்கள். அதைப் புரிந்து கொண்டுவிட்டார்கள்.*

(அஈ) ஒன்றிய அரசு இரத்து செய்த அமைப்புசாரா சங்கங்களின் சட்டங்களை மீண்டும் அமல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

[*2023 ஏப்ரல் 21*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புசாரா சங்கங்களின் சட்டங்களை, ஒன்றிய அரசு* silent *ஆக இரத்து செய்துவிட்டது. அதனை நாம் அமல்படுத்துவோமா என்ற கேள்வியை எழுப்பி, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அஉ) தீப்பெட்டித் தொழிலுக்கு எதிரான Plastic lighter விற்பனையைத் தடை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழில் தென்மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான ஏழைப் பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தைத் தருகின்ற தொழிலாக இருக்கின்றது. தற்சமயம் பிளாஸ்டிக்காலான* lighters *வெளிநாடுகளிலிருந்து முறைகேடாக இங்கே விற்பனைக்கு பெருமளவில் உள்ளதால், தீப்பெட்டி விற்பனை பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, கோவில்பட்டியில் உள்ள ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையை 8–9–2022 அன்று ஆய்வு செய்தார்கள். உடனடியாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். 15–11–2022 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற உற்பத்தியாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் நானும் சென்று மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறோம். அந்த* lighter*–ஐ தடை செய்து, தீப்பெட்டித் தொழிலை வாழ வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பிறந்த நாள் பரிசாக அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

(அஊ) கோயம்புத்தூர் மாவட்டம், தொழிற்சாலைகளால் நதிநீரில் ஏற்படும் மாசு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*